# இலங்கை வங்கி

**இலங்கையின் முதற்தர வங்கியில் இணைந்து அதன் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரிவுக்குத் தலைமை தாங்குங்கள்!**

**இலங்கை வங்கியின் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரிவின் ஒரு பகுதியாக விளங்க விரும்பும் தகைமையும் இளமைத் துடிப்பும் இலட்சிய நோக்கமும் கொண்ட நபர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## டிஜிட்டல் சந்தைப்படுத்தல் முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படை)

### முக்கிய பொறுப்புகள்

1. **டிஜிட்டல் உத்தி மேம்பாடு** : வங்கியின் இலக்குகளுக்கு அமைவான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்கி செயற்படுத்த சந்தைப்படுத்தல் குழுவுடன் இணைந்து செயற்படுதல்.
2. **உள்ளடக்க உருவாக்கம் மற்றும் முகாமைத்துவம்:** வலைத்தளம், வலைப்பதிவு மற்றும் சமூக ஊடகங்களுக்கான சுவாரஷ்யமான உள்ளடக்கங்களை உருவாக்குதல் மற்றும் வருங்கால மாணவர்களை இலக்காகக் கொண்ட பாடநெறி சார்ந்த செயற்றிட்டங்களில் பணியாற்றுதல்.
3. **சமூக ஊடக முகாமைத்துவம் :** Facebook, Instagram, Linkedin மற்றும் Twitter போன்ற தளங்களில் வங்கியின் இருப்பை மேற்பார்வையிடுவதோடு மக்களுடனான ஈடுபாட்டை அதிகரிக்கவும் ஆர்வமுள்ளவர்களை ஈர்க்கவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
4. **SEO (தேடல் பொறி மேம்பாடு) :** முக்கியசொற்கள் தொடர்பான ஆய்வை நடத்துதல், சிறந்த தேடல் தரப்படுத்தல்களுக்கான உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் SEO செயற்திறனைக் கண்காணித்தல்.
5. **கட்டணம் செலுத்தப்படும் விளம்பரம்:** Pay-Per-Click (PPC) விளம்பர நடவடிக்கைகளை (Google விளம்பரங்கள், Facebook விளம்பரங்கள்) முகாமைசெய்தல், செயற்றிறனைக் கண்காணித்தல், மற்றும் உயர் நாணயமாற்று விகிதங்களுக்கு மேம்படுத்துதல்.
6. **மின்னஞ்சல் மூலமான சந்தைப்படுத்தல் :** வருங்கால மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களுக்கான மின்னஞ்சல் செயற்றிட்டங்களை உருவாக்கி முகாமை செய்தல், பட்டியல்களை வகைபிரித்து பெறுபேறுகளைக் கண்காணித்தல்.
7. **பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் :** Google Analytics போன்ற கருவிகளைப் பயன்படுத்தி டிஜிட்டல் தளங்களில் முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகளைக் (KPI) கண்காணித்து செயற்றிறன் தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
8. **இணையதள முகாமைத்துவம் :** இணையதளத்தைப் பராமரித்து இற்றைப்படுத்துவதோடு அது பயனர்க்கு எளிதாக இருத்தல், கைபேசிப் பயன்பாட்டுக்கு உகந்ததாக இருத்தல் மற்றும் சிறந்த SEO நடைமுறைகளைப் பின்பற்றுதல் என்பவற்றை உறுதிசெய்தல்.
9. **வணிகக் குறி முகாமைத்துவம் :** அனைத்து டிஜிட்டல் தளங்களிலும் நிலையான வணிகக்குறி மேம்பாடு மற்றும் செய்தியிடலை உறுதி செய்தல்.
10. **சேர்க்கை வழிகளை உருவாக்குதல் :** மின்னஞ்சல் மற்றும் சமூக ஊடக நடவடிக்கைகள் ஊடாக அதிக மாணவர்களை உள்ளீர்க்கவும் சேர்க்கை வழிகளை உருவாக்கவும் உத்திகளை உருவாக்குதல்.

### தகுதி அளவுகோல்கள்

**இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**

**தகைமைகள்**

- சந்தைப்படுத்தலில் இளமாணிப் பட்டம். தொடர்புபட்ட துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றிருப்பது மேலதிகத் தகைமையாகும்.
- தகவற் தொழில்நுட்பத்தில் பட்டம் அல்லது டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் டிப்ளோமா பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அனுபவம்**

- டிஜிட்டல் சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் இரண்டு (02) ஆண்டுகள் தகைமையின் பின்னரான தொழில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பிற தகுதிகள்**

- ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருத்தல்.
- இணையதளங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் தொடர்புடைய களங்களில் முழுமையான புரிதலும் தொழில்சார் அறிவும் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 45 வயது அல்லது அதற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும்.

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- மொத்த ஒப்பந்த காலம் 03 ஆண்டுகள் (செயற்றிறன் ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்படும்)
- விண்ணப்பதாரிகளின் சுயவிவரத்தின் அடிப்படையில் ஒரு கவர்ச்சிகரமான சம்பளத் தொகுப்பு வழங்கப்படும் என்பதோடு அதனைப் பேசித் தீர்மானிக்க முடியும்.

### தெரிவு நடைமுறை

மேற்படி தகுதி அளவுகோல்களின் அடிப்படையில் பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வுச் செயன்முறையினூடாகத் தெரிவு செய்யப்படுவர்.

### விண்ணப்பிக்கும் முறை

www.boc.lk என்ற எமது இணையத்தளத்தின் Careers என்ற பகுதியின் கீழுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உங்களது சுயவிபரக் கோவையை பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தொடர்புடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றின் நிழற்பிரதியுடன் இணைத்து 2025.12.13ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தேவையான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படாத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரி பதவிக்கு விண்ணப்பிக்கும்போது வங்கியின் வலைத்தளத்தின் **"மனிதவள முகாமைத்துவ"** பக்கத்தில் (https://www.boc.lk/hr-management) உள்ள **"ஆட்சேர்ப்புக்கான தனிநபர் தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்"** பகுதியை வாசித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் அபிவிருத்தி)**<br>**மனித வளப் பிரிவு**<br>**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**<br>**இலங்கை வங்கிச் சதுக்கம்"**<br>**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை**<br>**கொழும்பு - 01.**

- ***தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.***
- ***தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.***
- ***நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு***
- ***வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.***

1975 BOC CALL CENTRE
www.boc.lk
AA-(lka) Fitch Ratings, Brand Rating: AAA- (Brand Finance Lanka)
இலங்கை வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
**தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,**
**இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.**
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்